வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
மதுரை – 2.

மே.கு.க.எண்.பநி3/5661/2018(2), நாள் – 05.10.2020.

பார்வை – அரசாணை (3டி) எண்.185 வேளாண்மை (வேநி.9) துறை,
நாள் – 18.09.2020.

---

நகல் அனுப்பபப்படுகிறது.

ஒம்/–ச.சந்திரா,
வேளாண்மை இணை இயக்குநருக்காக,
மதுரை–2.

பெறுநர்
திருமதி.த.ஜெனிபர், இளநிலை உதவியாளர் (பி.அ)
இவ்வலுவலகம்

– பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் மூன்று ஆண்டுகள் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் எனவும் “தகுதிகாண் பருவ” காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை முடிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நகல் – இருப்புக்கோப்பு

//உத்தரவின்படி//

கண்காணிப்பாளர்.

6/10/2020

6/10/2020

சுருக்கம்

வேளாண்மைத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி D. ஜெனிபர் – இளநிலை உதவியாளராக (பி.அ) கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15, பிரிவு 20(6)(b) மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்த்தி பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வேநி9) துறை

அரசாணை (3D) எண் 185 நாள்: 18.09.2020
சார்வரி வருடம்,
புரட்டாசி திங்கள் 2,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டது:

1. அரசாணை (டி) எண் 190, வேளாண்மை (வேநி4(2)) துறை, நாள் 14.07.2017.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி3 / 55489 / 2018, நாள் 27.07.2018 மற்றும் 20.02.2020.
3. அரசாணை (நிலை) எண் 100, பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
4. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு ஊழியர் திரு என். தர்மராஜ், வேளாண்மை உதவி அலுவலர் அவர்கள் 14.06.1997 அன்று காணாமல் போய் பின்னர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் (W.P No. 683 / 2011, நாள் 28.06.2011) பேராணை மூலம் இறந்ததாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 3 வருட காலத்திற்குள் அதாவது 17.06.2014 அன்று அன்னாரது வாரிசுதாரர் திருமதி டி. ஜெனிபர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பித்துள்ள நிலையில், தனியர் திருமதி டி. ஜெனிபர் விண்ணப்பம் அளித்த நாளுக்கு முன்னரே திருமணமானவர் என்றும், அரசாணை (நிலை) எண் 165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 30.08.2010–க்கு முரணானது என்பதாலும் இந்நிகழ்வினை சிறப்பினமாகக் கருதி தனியர் பொருட்டு அரசாணையை தளர்வு செய்து, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்குரிய அனைத்து பிற தகுதிகளையும் பெற்றிருக்கும்பட்சத்தில், திருமதி டி. ஜெனிபர் த/பெ. (மறைந்த) திரு என். தர்மராஜ் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை இயக்குநர் அவர்கள், காணாமல் போன அரசு ஊழியர் திரு என். தர்மராஜ் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அனைத்து சான்றுகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்து அவரது வாரிசுதாரரும் மகளுமான திருமதி D. ஜெனிபர் என்பவருக்கு வேளாண்மை இயக்குநர் அலுவலக செயல்முறை ஆணை எண் அநிபி6 / 126830 / 2016, நாள் 21.03.2018ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக தற்காலிகப் பணி நியமனம் செய்து மதுரை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது என்றும், இதனை தொடர்ந்து, தனியர் 09.04.2018 முற்பகல் மதுரை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (பி.அ) பணியில் சேர்ந்துள்ளார் எனவும், அன்னாரின் பணியினை 09.04.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, 14.06.1997 அன்று காணாமல் போய் பின்னர் நீதிமன்ற ஆணை மூலம் இறந்ததாக அறிவிக்கப்பட்ட அமரர் என். தர்மராஜ் அவர்களின் வாரிசு / மகள் திருமதி D. ஜெனிபர் அவர்களை கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக (பி.அ) நியமனம் செய்யப்பட்ட பணியினை, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15 (திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனம் வழங்க ஏதுவாக), தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவுகள் 15 மற்றும் 20(6)(b) (நீதிமன்ற ஆணைப்படி இறந்ததாக அறிவிக்கப்பட்ட ஒருவருக்கு பணி நியமனம் வழங்க ஏதுவாக) மற்றும் பிரிவு 28(2) (நியமன நாளிலிருந்து பணப்பலன் முன்தேதியிட்டு வழங்க ஏதுவாக) ஆகியவற்றை அச்சட்டப்பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்வு செய்து தனியரின் பணியினை 09.04.2018 மு.ப முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலும், இளநிலை உதவியாளர் (பி.அ) நியமனம் செய்யப்பட்ட தனியரின் பணி 09.04.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், தனியர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடைவராகிறார்.

6. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறையின் அ. சா. எண் 10701 / க்யூ.1 / 2020-1, நாள் 09.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ. சா. எண் 21846 / ஜி1 / 2020-1, நாள் 15.09.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இ).
திரு. D. ஜெனிபர் இளநிலை உதவியாளர் (பி.அ)
<u>வழி:</u> வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை-5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்பு)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத்தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.

<u>நகல்</u>
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 19511 / வேநி9 / 2018.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

வ. சசிகுமார்
19/9/2020
பிரிவு அலுவலர்